**புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையிம் - 2020.**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 82 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட பணிக்கொடைப் படிகளுக்கான ஒதுக்கம் ரூபா 493,165 ஆனது நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.<br>அந்நியமத்தின் 118 மற்றும் 119 பந்திகளின் பிரகாரம் தேறிய | 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் செலவுகள் வகைப்படுத்தப்படுவதுடன் மற்றும் முறையான உரிமை மாற்றங்கள் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம் தேவையான வெளிப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

சொத்து/உரிமை மூலதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள கூறுகளில் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மாற்றங்கள் தெளிவாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டு உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் பல்வேறு செயற் திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,345,936 இற்கான விபரங்கள் குறித்த செயற்திட்டங்களின் பிரகாரம் வகைப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உலகளாவிய முதியோர் புகையிலை கணிப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,536,000 அட்டுறுச் செலவாக கணக்கிடப்பட்டிருக்க வில்லை. இதனால் மீளாய்வாண்டில் பற்றாக்குறை அந்த அளவினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் இத்தவறு திருத்தப்படும். | இத்தவறு திருத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கற்பனைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய மொத்தக் கிரயம் ரூபா 2,998,625 ஆன ஒளி மற்றும் ஒலி நாடாக்களின் பெறுமதி, ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த தவறு திருத்தப்பட்டுள்ளதுடன் ஆனால் அச்சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களிலான வேறுபாடு ரூபா 1,155,241 ஆனது மேலதிக பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மீண்டும் | - மேற்படி - | - மேற்படி - |

திரட்டிய மிகை / குறைபாட்டுக் கணக்கிற்கு சீராக்கப்படவில்லை. இதனால் அதற்குச் சமனான மதிப்பினால் கற்பனைச் சொத்துக்களின் தேறிய மதிப்பு குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 14(ஐ) பிரிவு | புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பாக அனைத்து விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 04 அதிகாரிகளில் 02 பேரால் மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பாக வருடாந்த அறிக்கையொன்று மட்டுமே பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | இலங்கை பொலிசாரினால் குறிப்பிட்ட தகவல்கள் 2021 யூலை 10 ஆந் திகதி அதிகார சபைக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | அதிகார சபை சட்டத்தின் குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 381, நிதிப் பிரமாணம் 625(3) மற்றும் 2019 யூலை 25 ஆந் திகதிய SC&PMU/Grant/19 ஆம் இலக்க நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் | திறைசேரியின் அனுமதியின்றி 2008 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கை வங்கியில் அதிகாரசபையின் பெயரில் இரு வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. அத்துடன் உலக சுகாதார அமைப்பினால் உலகளாவிய முதியோர் புகையிலைக் கணிப்பீட்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,203,537 ஆன மானியம் வெளிநாட்டு வளங்கள் | பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு தரப்பினரால் மானியமாக வழங்கப்பட்ட பணம் திறைசேரியில் வைப்புச் செய்து நிதிப் பிரமாணம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைப் | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கடிதம் | திணைக்களத்தினூடாக அத்திணைக்களத்தின் அனுமதியுடன் பெறப்படாமையுடன் நிதி நேரடியாக அந்த இலங்கை வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடுகளில் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்படாது மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.2.1 மற்றும் 5.2.3 ஆம் பிரிவுகள் | 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வருமானம் மற்றும் செலவுகள் கூற்று, அத்திகதியில் வரவு செலவுத் திட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஐந்தொகையுடன் கூடிய மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் பாதீடு மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் திறைசேரியினால் வழங்கப்படுகின்ற ஒதுக்கங்களுக்கான செயற்பாடுகள் மட்டுமே அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பெறப்பட்டிருந்த வெளிநாட்டு மானியங்களுக்கான செயற்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சுற்றறிக்கைப் பிரகாரம் வருடத்திற்கான தேவையான வரவு செலவுத் திட்ட ஆவணங்களை தயாரிப்பதற்கும் அதிகார சபையினால் தயாரிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டத்தில் நேரடி வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 6.3.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த | 2020 ஆம் ஆண்டிற்காக | சுற்றறிக்கையில் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரைவு வருடாந்த அறிக்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்படாததுடன் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார சபையின் செயற்பாடுகள், வெளிநாட்டு மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் போன்றன அதில் உள்ளடக்கப்படவில்லை. | தயாரிக்கப்பட்ட வரைவு வருடாந்த அறிக்கை பூரண அறிக்கையொன்றாக இருந்தமை மற்றும் முறையாக தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற வருடாந்த அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 7.4.1 பிரிவு | வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெறவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக எவ்வித கூட்டமொன்றும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சிற்சில காரணங்களினால் 2020 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,337,220 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 472,997 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 864,223 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகின்ற மூலதன மானியங்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 21,709,620 குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவுகள் விடயங்களின் போக்குத் தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகின்ற மூலதன மானியங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 21,709,620 அதாவது நூற்றுக்கு 90 வீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் அதிகார சபையின் வேலைத்திட்டத்திற்கான செலவுகள் ரூபா 22,061,982 ஆல் அதாவது நூற்றுக்கு 83 வீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகையிலை மற்றும் மதுபானங்களின் ஆபத்துக்களிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக சகல பிரிவினரையும் அணி திரட்டுதல் என்ற அதிகார சபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக வருடாந்தம் போதுமானளவு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதிகளைத் திரட்டிக் கொள்வதற்கு அதிகார சபை தவறியிருந்தது. இதன் விளைவாக 2017 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 23.11 மில்லியன் ஆன செலவு 2020 ஆம் ஆண்டு வரையில் ரூபா 4.35 மில்லியன் வரையில் அதாவது நூற்றுக்கு 81 வீதத்தினால் குறைவடைந்திருந்தது. அத்துடன் 2017 ஆம் ஆண்டில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்காகச் செலவிடப்பட்ட செலவுகள், அதிகார சபையின் நாளாந்தம் செயற்பாட்டுச் செலவுகளுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 132 வீதம் ஆனால் 2020 ஆம் ஆண்டு வரையில் அது நூற்றுக்கு 20 வீதமாகக் குறைந்துள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதிகாரசபையின் செயலாற்றல் நூற்றுக்கு 112 வீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நோய் 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட செலவுகள் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்ததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிறைவேற்றப்படக்கூடிய செயற்பாடுகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ள தாகவும், 2021 ஆம் ஆண்டில் அரசினால் கொவிட் கட்டுப்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டு நடாத்தப்படக்கூடிய எல்லைகளின் கீழ் கூட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்கள் போன்றன நடாத்தப்பட்டிருந்தமை. அதன் பிரகாரம் அதிகார சபையின் செயற்பாடுகளில் முன்னேற்றத்தைப்ப பேணுகின்றதுடன் செயற்திறனை அதிகரிப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதிகபட்சம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | அதிகார சபையின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உலக சுகாதார அமைப்பின் மானியத்தில் 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்த உலகளாவிய முதியோர் புகையிலை கணிப்பீட்டின் முதலாம் சட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராமையுடன் இச் செயற்திட்டத்திற்கான சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டிற்காக அரசின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படாமல் 03 வழங்குனர்களுக்கு ரூபா 2,904,185 ஆனது செலுத்தப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கு பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய முதியோர் புகையிலைக் கணக்கெடுப்பின் முதலாம் கட்டத்திற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அதில் அதிகார சபையின் பெயரில் விலைமனுக்கோரல் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரசின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்திற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிராததுடன் இதனால் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான பௌதீக செயலாற்றலை அளவிடுவதற்கான திட்டவட்டமான அளவு கோல்கள் எதுவும் இருக்கவில்லை. அத்துடன் செயல் நடவடிக்கைத் | அதிகார சபையின் சார்பில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்திற்கான இலக்குகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றும் இது தொடர்பாக அதிகார சபையினால் கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் இந்நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கைகள் | சுற்றறிக்கை பிரகாரம் பௌதீக செயலாற்றலை அளவிடுவதற்கான திட்டவட்டமான அளவீட்டு அளவு கோல்களை உள்ளடக்கியதாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றம் மற்றும் தயாரிக்கப்பட்ட முன்னேற்றம் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தமையால் மற்றும் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக கிடைத்திருந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்படாமையால் அதிகார சபையின் நிதிச் செயலாற்றலைச் சரியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்படும். | |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் ஆனால் 2020 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வொன்று செய்யப்படல் வேண்டும். |